சுருக்கம்

மாற்றுத் திறனாளிகள் நலன்–2010–2011–ம் ஆண்டிற்கான ஏப்ரல் 2010 முதல் ஜூன் 2010 வரையிலான காலாண்டிற்கு கடுமையாக பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு பராமரிப்பு உதவித் தொகை வழங்குதல் ரூ. 1,57,57,500/– செலவினம் அனுமதித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி. 2)த் துறை

அரசாணை (நிலை) எண்.26 நாள் 10– 06– 2010
வைகாசி 28, திருவள்ளுவர் ஆண்டு 2041
படிக்கப்பட்டது:-

1. அரசாணை(நிலை) எண். 131, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 29.9.2009.
2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் நேர்முக கடிதம் ந.க. எண்.3742/ஊம 2/10, நாள் 14.5.2010.

= = = = = =

ஆணை:

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் 2009–2010ம் ஆண்டிற்கான கடுமையாக பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு பராமரிப்பு உதவித் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ், 10,000 பயனாளிகளுக்கு, பயனாளி ஒருவருக்கு மாதம் ரூ.500/– வீதம் 12 மாதங்களுக்கு பராமரிப்பு உதவித் தொகையும் அதற்கான அஞ்சலக பணவிடை செலவிற்காகவும் ரூ.6,30,30,000/– நிதி ஒப்பளிப்பு செய்தும் ஆணை வெளியிடப்பட்டது. மேற்படி தொகை அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டு பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது என்று மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் தெரிவித்துள்ளார்.

2. ஒவ்வொரு ஆண்டும் அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்களிடமிருந்து பயனீட்டுச் சான்றிதழ் பெற்று அரசுக்கு கருத்துரு அனுப்பப்படும் என்றும், அதனைத் தொடர்ந்து அரசாணை வெளியிடப்படும் என்றும், இதனால் பயனாளிகளுக்கு குறிப்பிட்ட காலத்திற்குள் பராமரிப்பு உதவித் தொகை சென்றடைவதில்லை என்றும், அதிகளவில் பயனாளிகள் பயன்பெறும் திட்டமாக இத்திட்டம் உள்ளது என்றும், இத்திட்டத்தில் மொத்தம் 10,000 பயனாளிகள் பயன்பெற்று வருகின்றனர் என்றும், வருவாய்த் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் முதியோர் உதவித் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு குறிப்பிட்ட காலத்திற்குள் ஒவ்வொரு மாதமும் நிதியுதவி பயனாளிகளுக்கு சென்றடைகிறது என்றும், அதே போல் இத்திட்டத்தினையும் செயல்படுத்த வேண்டும் என்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் தெரிவித்துள்ளார். மேலும் 2010–2011–ம் நிதியாண்டில் ஏப்ரல் 2010 முதல் ஜூன் 2010 வரையிலான காலாண்டிற்கு இத்திட்டத்தை செயல்படுத்த நிதி ஒதுக்கீடு தற்போது வழங்குமாறும்,

மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்களிடமிருந்து பயனட்டுச் சான்றிதழ், பயனாளிகள் எண்ணிக்கை மற்றும் தேவைப்படும் நிதி பற்றிய விவரங்கள் பெறப்பட்டு மீதமுள்ள 9 மாதங்களுக்கான நிதி ஒதுக்கீடு பின்னர் கோரப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

3. கடுமையாக பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு பராமரிப்பு உதவித் தொகை வழங்கும் திட்டத்திற்கு ஏப்ரல் 2010 முதல் ஜூன் 2010 வரை காலாண்டிற்கான செலவினம் நிதி ஒப்பளிப்பு செய்து வழங்குமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் தெரிவித்துள்ளார்.

| | | |
|---|---|---|
| அ. | 1.4.2010 முதல் 30.6.2010 வரையிலான காலத்திற்கு பராமரிப்பு உதவித் தொகை<br>ரூ.500/– x 10,000 x 3 மாதங்கள் | ரூ. 1,50,00,000/– |
| ஆ. | 1.4.2010 முதல் 30.6.2010 வரையிலான காலத்திற்கு பராமரிப்பு உதவித் தொகை அனுப்ப பணவிடை அஞ்சல் செலவு<br>ரூ.25.25 x 10,000 x 3 மாதங்கள் | ரூ. 7,57,500/– |
| | மொத்தம் | ரூ. 1,57,57,500/– |

(ரூபாய் ஒரு கோடியே ஐம்பத்து ஏழு இலட்சத்து ஐம்பத்து ஏழயிராத்து ஐநூறு மட்டும்)

4. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை அரசு கவனத்துடன் பரிசீலித்து கடுமையாக பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு பராமரிப்பு நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ் 10,000 பயனாளிகளுக்கு பராமரிப்பு நிதிஉதவி அளிக்க பயனாளி ஒருவருக்கு மாதம் ஒன்றிற்கு ரூ.500/– வீதம் ஏப்ரல் 2010 முதல் ஜூன் 2010 வரை மூன்று மாதங்களுக்கு ரூ.1,50,00,000/– (ரூபாய் ஒரு கோடியே ஐம்பது இலட்சம் மட்டும்) பராமரிப்பு உதவித் தொகைக்காகவும், ரூ.7,57,500/– (ரூபாய் ஏழு இலட்சத்து ஐம்பத்து ஏழாயிரத்து ஐநூறு மட்டும்) பணவிடை அஞ்சல் செலவுக்காகவும் ஒப்பளிப்பு வழங்கியும் இத்தொகையை பெற்று வழங்க மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அதிகாரம் வழங்கியும் ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4–ல் அனுமதிக்கப்பட்ட செலவினத்தை கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

**அ. பராமரிப்பு உதவித் தொகை ரூ. 1,50,00,000/–**

"2235–சமூகப் பாதுகாப்பும் நலனும்–02–சமூக நலன்–101–மாற்றுத் திறனாளிகள் நலன் –I திட்டத்தில் சேராதது – CD-கடுமையாக இயலாமையுற்றோருக்குப் பராமரிப்புப் படிகள்–09– உதவித் தொகை–03–குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித்தொகை"

(த.தொ.கு. 2235–02–101–CD–0938)

**ஆ. பணவிடை அஞ்சல் செலவினம் ரூ. 7,57,500/–**

"2235– சமூகப் பாதுகாப்பும் நலனும்–02–சமூக நலன்–101–மாற்றுத் திறனாளிகள் நலன் –I திட்டத்தில் சேராதது –CD– கடுமையாக இயலாமையுற்றோருக்குப் பராமரிப்புப் படிகள் –05–அலுவலகச் செலவுகள் –04–அலுவலகப் பணி அஞ்சல் வில்லைகள் மற்றும் தபால் செலவு"

(த.தொ.கு. 2235–02–101–CD–0545)

6. இச்செலவினத்தை சம்பந்தப்பட்ட மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள் மாதந்தோறும் கருவூலங்களில் பட்டியல் சமர்ப்பித்து தொகையைப் பெற்று தொடர்புடைய பயனாளிகளுக்கு பண அஞ்சல் மூலம் அனுப்பி வைக்கவும் மற்றும் பயனீட்டு சான்றிதழை முறையாக பராமரிக்கவும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

7. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.எண்.நிதி(மா.தி.ந)/95/SS(RT)/10, நாள் 09.06.2010 ஒத்திசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சோ. சு. ஜவஹர்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–6.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
தலைமைக் கணக்காயர், சென்னை–9/18/35 மற்றும் 18/35 (பெயரில்)
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–5/35.
அனைத்து கருவூல அலுவலர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
<u>நகல்:-</u>
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
நிதி (சமூக நலம்/ வரவு செலவு பொது–II)த்துறை, சென்னை–9.
இருப்பு கோப்பு/உதிரி நகல்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.